**ரிதீகம பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரிதீகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் நவம்பர், திசெம்பர் மாதங்களுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 269,471 ஆன எரிபொருள் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் கடன் அறவீடு ரூபா 68,750 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 64,910,697 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 7,592,632 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து அறவிடப்படாது காணப்பட்டன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 43,843,359 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளில் இருந்து ரூபா 7,771,534 ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்வு செய்யப்படாது காணப்பட்டன.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 125,000 | உரித்துக் கோரப்படாத ரூபா 639,703 தொகையான 108 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 751(2) | 709,380 | வெவ்வேறு வகையான திரவிய இருப்புக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் வருடக் கணக்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 750 | - | சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் உட்பட சபை வாகனங்களுக்கு அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவை | | |
| 3.4.2 (அ) வழிகாட்டல் | 977,320 | 2017 சனவரி முதல் செப்தம்பர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,727,479 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,591,345 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டிய லிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டிய லிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,083 | 3,777 | 3,358 | 2,904 | 2,565 | 2,478 | 2,791 | 2,485 |
| (ii) | வாடகை | 4,917 | 5,635 | 5,466 | 553 | 4,487 | 4,694 | 4,765 | 385 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 1,683 | 1,612 | 1,718 | 171 | 1,182 | 1,612 | 1,704 | 276 |
| (iv) | ஏனைய வருமானம் | 77,322 | 69,535 | 69,531 | 37,390 | 75,453 | 67,095 | 54,593 | 37,382 |
| | மொத்தம் | 87,005 | 80,559 | 80,073 | 41,018 | 83,687 | 75,879 | 63,853 | 40,528 |

**குறிப்பு**

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 29 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ரூபா 87 மில்லியனான வருமானத்தில் ரூபா 80 மில்லியன் பட்டிலிடப்பட்டு முன்னைய ஆண்டுகளில் நிலுவையில் பெறுவனவான ரூபா 29 மில்லியனுடன் ரூபா 80 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 40 மில்லியனாக இருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மற்றும் ஆண்டின் பட்டியலுடன் மொத்தம் ரூபா 5,460,127 தொகையான சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 2,750,037 அதாவது 50 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,656,075 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 240,204 ஆன நிலுவை ஏக்கர் வரியிலிருந்து ஆண்டின் போது 7 சதவீதமான ரூபா 17,034 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 248,369 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4 குத்தகை வாடகை மற்றும் கடை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரைசொத்துக்கள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 307,915 ஆன குத்தகை வாடகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரிதீகம சந்தை கடைகளுக்குரிய 1988 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இருந்து ரூபா 48,360 அறவிட வேண்டியிருந்தது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

முன்னைய ஆண்டுகளுக்குரியதாக காணப்பட்ட ரூபா 170,935 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,573,753 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 24,715,895 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாதாந்தம் சேகரிக்கப்படும் 75 தொன் கழிவுப்பொருட்களில் உக்காத 30 தொன் கழிவுப்பொருட்கள் அளவில் குத்தகைக்கு எடுக்கப்பட்டு தனியார் காணியொன்றில் குழிகள் வெட்டப்பட்டு வெளியேற்றப்படுவதால் எதிர்காலததில் சுற்றாடல் சார்ந்த சிக்கல்கள் உருவாகக்கூடியதாக இருந்தது.

(ஆ) திண்மக்கழிவுப்பொருள் நிலையத்தில் 450 கிலோ கிராம் பொலித்தீன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அற்றை பொருத்தமான வகையில் அகற்றும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பான விரிவான அறிவு சபையிடம் இல்லாமல் இருந்த போதிலம் வறுமையை ஒழிப்பதற்கு சுயதொழில் வாய்ப்பிற்காக தேவையான வசதிகளை விரிவுபடுத்துவதற்காக நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. வருமான மட்டம் நிரந்தரமாக இல்லாமை, வாழ்க்கைச் செலவினம் அதிகரித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவுகள் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளில் வீதவரி நிலுவை மீதி ரூபா 2,656,075 வரை அதிகரித்து காணப்பட்ட போதிலும் பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) மற்றும் (இ) இன் பிரகாரம் ஆதனங்களை தடைசெய்யும் 0 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி ரூபா 189,886 மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிப்பட்டிருந்தத.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 12,379,634 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 16 கடைகளில் 11 கடைகள் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

60 ஏக்கர் அளவிலான காணி சபையின் அனுமதியின்றி பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனை பெறுமதியில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய 01 சதவீத குத்தகை வாடகை மற்றும் பொது அலுவல்களுக்கான காணிப் பகுதி சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்**

வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பொருத்தமான கட்டிடமொன்றை நிர்மாணித்து சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை**

சபைக்குரிய 53 மயான காணிகளில் 41 காணிகள் வருடக் கணக்காக அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகை**

**3.5 பெறுகை திட்டம்**

2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் சபையினால் பெறுகை திட்டமொன்று வருடக் கணக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 1,662,000 ஆல் மிகைத்து சமூக அடிப்படையிலான இரண்டு அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அச்சங்கங்களின் நிதி இயலளவு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | நிலுவை மீதிகளை அறவிடுவதில் மந்தமான நிலைமையொன்று காணப்படட்டமை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | உறுதிகள் மற்றும் கையளிப்பு சான்றிதழ் இல்லாத கட்டிடங்கள் மற்றும் மயானங்கள் காணிக்காக உறுதிகள் பெற்றுக் கொள்ளப்படாமை |
| (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுப் பொருட்கள் கைதவிர்ப்பு தொடர்பாக நீண்டகால நடைமுறைகள் இனங்காணப்படாமை |